LIBRARY
04
Eastern University, Sri Lanka

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III Examination in Business Administration/ Commerce (June / July 2009)

## (Repeat)

## BBA/COM 406 Research Methodology

சுகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : **02** மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

1. ஆய்வுக்குப் பயன்படுத்தக் கூடிய சஞ்சிகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. இலங்கையில் நிலவும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யக்கூடிய இரு முக்கிய ஆய்வுப் பிரச்சினைகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.

3. பின்வரும் பதங்களால் நீங்கள் விளங்குவது என்ன?

    a. பச்சை வீட்டு விளைவு
    b. திண்மக் கழிவு
    c. பேரழிவு முகாமைத்துவம்
    d. டெங்கு

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

5. செஞ்சிலுவை நிறுவனத்தின் தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

6. அமெரிக்காவின் தற்போதய புதிய சனாதிபதி யார்?

7. 2008ம் ஆண்டில் இலங்கையிலுள்ள ஐந்து முன்னணிக் கம்பனிகளைப் பெயரிடுக.

8. 2008ம் ஆண்டில் இலங்கையின் வேலையின்மை வீதம் எவ்வளவு?

9. "நுண்நிதி" என்னும் பதத்தால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?

10. பின்வரும் பதங்களைச் சுருக்கமாக விளக்குக.

    (i) USAID (ii) NORAD (iii) ICRC (iv) IELTS (v) IBRD

**(3 x 10 = 30** புள்ளிகள்)

## பகுதி – II

1. ஆய்வு முன்மொழிவு ஒன்றில் எவ்விடயங்களை நீங்கள் உள்ளடக்க வேண்டும்?

2. "ஆய்வுப் பிரச்சினை" என்பதன் கருத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

3. ஆய்வு ஒன்றுக்கான நூலாய்வினை நீங்கள் எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

4. காரண காரிய அடிப்படையில் ஆய்வு மாறிகளை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?

5. எண்ணக்கருவாக்க மாதிரியை எவ்வாறு நிறுவுவீர்கள் என்பதை உதாரணத்துடன் விளக்குக.

6. ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது தரவுகள் சேகரிக்கப்படும் முறைகள் யாவை?

7. வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கும் முறையின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் ஆராய்க.

8. மாதிரி எடுத்தல் நுட்ப முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

9. ஆய்வு அறிக்கை ஒன்றில் நீங்கள் சேகரிக்கின்ற தரவுகளை எம் முறைகளில் முன்வைக்க முடியும்?

10. தரவுப் பகுப்பாய்வு முறைகள் யாவை? அவற்றில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

**(4 x 10 = 40 புள்ளிகள்)**

04 DEC 20..
Eastern University, Sri L..

## பகுதி – III

கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட க. பொ. த. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு ஒன்றின்படி கடந்த ஐந்து ஆண்டுகளாக க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடையும் வீதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைவடைந்து செல்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது எனக் கருதுக. அத்துடன் இப் பிரச்சினைக்கான காரணங்கள் யாவை என ஆய்வு ஒன்றை நடாத்தி கண்டறியுமாறும் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை சிபாரிசு செய்யுமாறும் நீங்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் கருதுக.

**வேண்டப்படுவது :**

1. ஆய்வுக்கான ஆய்வுப் பிரச்சினையையும் ஆய்வு வினாக்களையும் நிறுவுக.
2. ஆய்வுக்கான குறிக்கோள்களை வடிவமைக்குக.
3. மாறிகளை அடையாளங் கண்டு எண்ணக் கருவாக்க மாதிரியை வரைக.
4. மாறிகள், பரிமாணங்கள், குறிகாட்டிகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு நடைமுறையாக அட்டவணை ஒன்றைத் தயாரிக்கக.
5. ஆய்வுக்கான பொருத்தமான ஆய்வு முறையினை (தரவு சேகரிப்பு முறை, மாதிரி அளவு, மாதிரிப் பரம்பல், மாதிரி எடுப்பு முறை, தரவு பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு முறை) குறிப்பிடுக.

**(5 x 6 = 30 புள்ளிகள்)**